[பேரவைத் தலைவர்] [*2022 மே 10*

அலுவலர்களுக்கும், மேலும் எனக்கு பக்கபலமாக இருந்து கொண்டிருக்கின்ற நம்முடைய சிறப்பு தனிச் செயலாளர் திரு. ப. பத்மகுமார் மற்றும் முதுநிலை நேர்முக உதவியாளர் திரு. சு. மகேஷ் உட்பட அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2-25

அதேபோன்று பாதுகாப்பு ஏற்பாடுகளைத் திறம்பட செய்திட்ட காவல் துறைத் தலைவர், பெருநகர சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட அனைத்து காவல் துறை அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவையின் நிகழ்ச்சிகளை அன்றாடம் சிறப்பாக நேரடி ஒளிபரப்பு செய்ய உதவிய செய்தி-மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், ஒலிவாங்கிகளை இயக்கும் பொதுப் பணித் துறையின் ரேடியோ பிரிவினருக்கும், சட்டமன்ற நிகழ்வுகளைச் சிறந்த முறையில் மக்களுக்கு எடுத்துச் சென்ற பொதிகை தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி, தனியார் தொலைக்காட்சிகள், நாளிதழ்கள், பத்திரிகைகள், ஊடகங்கள், சமூக வலைதளங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள், நிருபர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் என அனைவருக்கும் எனது நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கிய அனைத்துப் பேரவைக் காவலர்களுக்கும் (Watch and Ward) பேரவையின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அனுமதியுடன் ஒரேயொரு விஷயத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப் பாராட்டியது என்பதைவிட பெருமை எனக்கு இருக்க முடியாது. அந்த அளவிற்கு சட்டமன்றத்திலேயே என்னைப் பாராட்டியதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

2022 மே 10]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-26 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

122. 2015-2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

123. 2016-2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)